III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.105/2019

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 14-06-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : M.Hari | Village | : |
| Father's Name | : Murugesan | Calling | : |
| Age | : | Taluk | : |

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கட்டிடம் மேற்பார்வையாளராக பணியாற்றி வருகிறேன். வா.த.சா.1–ல் எனது உடன் பிறந்தவர்கள் பற்றி எதுவும் சொல்லப்படாததினால் அந்த ஆவணம் உண்மையானதாக இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்யப்படும் போது நான் எனது உடன் பிறந்தவர்களுக்கு தெரியாமல் முடியாத எனது தாயாரை அழைத்து சென்று எனக்கு சாதகமாக எனது தாயரை ஏமாற்றி எழுதி வாங்கிக் கொண்டேன் என்றால் சரியல்ல. அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் எனது தாயாரை நான் பார்த்துக்கொள்வது பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் எனது தாயாரை நான் பார்த்துக்கொள்வதாக எனது தாயாரிடம் கூறினேன். தாவா சொத்து தவிர வேறு ஏதேனும் சொத்து எனது குடும்பத்திற்கு சொந்தமாக இருந்ததா என்றால் முதலாவது பிரதிவாதியின் திருமணத்தின் போது அவர் பெயருக்கு எனது தகப்பனார் ஒரு சொத்து வாங்கி கொடுத்தார். நான் எனக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்தே தாவா சொத்தில் இருந்து வருகிறேன். ஆரம்பத்திலிருந்து எனது சகோதரிகள் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் இல்லை. எனது தாயார் இறந்த 2017 க்கு பின்னர் தான் முதலாவது பிரதிவாதி, அவரது கணவர் மற்றும் இரண்டாம் பிரதிவாதி தாவா சொத்தில் வந்துவிட்டனர். முதலாவது பிரதிவாதி ஆரம்பத்திலிருந்து தனது கணவர் மற்றும் பிள்ளைகளுடன் தாவா சொத்தில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது மூத்த சகோதரியான ரோகிணி 2000 வருடத்தில் இறந்தார். அவரது உடலை தாவா சொத்தில் வைத்து இறுதி சடங்குகள் செய்யப்பட்டது. எனது தாயார் என்ன படித்துள்ளார் என்பது எனக்கு தெரியாது. அவருக்கு எழுத, படிக்கத்தெரியாது. எனது தந்தை ஆவின் பால் பண்ணையில் வேலை பார்த்து வந்தார். அவர் எந்த வருடத்தில் ஓய்வு பெற்றார் என்பது எனக்கு

குறிப்பிட்டு தெரியவில்லை. எனது தகப்பனார் மாற்றுத்திறனாளி. எனது தாயார் வேரை எதுவும் செய்து வரவில்லை. எனது தந்தை ஓய்வு பெறும் போது எனது வயது **25–26** இருக்கும். தாவா சொத்திலுள்ள கட்டிடம் ஆரம்பத்தில் சிறிதாக கட்டப்பட்டு எனது தந்தை ஓய்வு பெற்ற போது கிடைத்த பணத்தை வைத்து அதன் பின்னர் மீதி கட்டிடத்தை கட்டினார் என்றால் சரியல்ல. நான் வேலை பார்த்து வந்த கம்பெனியிலிருந்து வீட்டு கட்டி முடிக்கப்பட்டது. நான் தாவா சொத்தை எனக்கு செட்டில்மென்ட் எழுதி கொடுத்தால் அதை வைத்து கடன் பெற்று வியாபாரத்தை அபிவிருத்தி செய்து அதன் பின்னர் அதே சொத்தை எனது தாயாருக்கு திருப்பி கொடுத்துவிடுவதாக அவரிடம் கூறி செ சட்டில்மென்ட் பத்திரத்தை நான் எனது பெயரில் பதிவு செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. அந்த செட்டில்மென்ட் பத்திரம் **2013** ல் எழுதி கொடுக்கப்பட்ட பின்னர் தான் எனக்கு **2014** ல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த திருமணத்திற்கான செலவு மற்றும் ஏற்பாடுகளை முதல் பிரதிவாதியும் அவரது கணவரும் தான் முன்னிலையில் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். எனது திருமணம் சம்மந்தமான பதிவு சான்றிதழில் முதலாம் பிரதிவாதி கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதியை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் நான் குடித்துவிட்டு எனது தாயாரிடம் தகராறு செய்து வந்தேன் என்றால் சரியல்ல. அதன் பேரில் காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்று அதன் பின்னர் தான் எனது தாயார் செட்டில்மென்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல. (கற்றறிந்த பிரதிவாதிகள் **1 முதல் 3** தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).